# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 28 வெள்ளிக்கிழமை 11.04.2025 கதிர் 164







# உள்ளூராட்சி சபைகளை இம்முறையும் தமிழரசு கைப்பற்ற ஆணை தாருங்கள்

## பரப்புரைக் கூட்டத்தில் சிறீதரன் வேண்டுகோள்



கிளிநொச்சி, ஏப். 11

**“அரசியல் தளத்தின் அடிப்படை அலகுகளாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களை வென்றெடுப்பதன் மூலமே, எமது மக்களின் அடிப்படை வாழ்வியலையும், அது சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளையும் கட்டமைக்க முடியும். அத்தகைய சமூகமயப்பட்ட அரசியலுக்கு அடித்தளம் அமைக்கக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களை இம்முறையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆணையை எமது மக்கள் வழங்குவார்கள் என்று நான் முழுமையாக நம்புகின்றேன்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில், கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட அக்கராயன் வட்டாரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து, கட்சியின் வட்டாரக் கிளைத் தலைவர் சுந்தரலிங்கம் கயூரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அக்கராயன் பிரதேச ஆதரவாளர்கள் பலரின் பங்கேற்போடு நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், கரைச்சிபிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான அருணாசலம் வேழமாலிகிதன், சபையின் மேனாள் உறுப்பினரான சுந்தரமூர்த்தி தயாபரன், கட்சியின் அக்கராயன் வட்டார வேட்பாளர் தட்சணாமூர்த்தி முரளி, வன்னேரிக்குளம் வட்டார வேட்பாளர் நாகேந்திரம் செல்வநாயகம், கணேசபுரம் வட்டார வேட்பாளர் யோகேஸ்வரன் நிரோயன், அக்கராயன் வட்டாரக்கிளை உறுப்பினர் உஷா சதீஸ்குமார், வட்டாரக்கிளையின் செயலாளர் மருதலிங்கம் யூட் அன்ரனி உள்ளிட்டோர் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தை நேரில் தரிசித்தார் பிரதமர் ஹரிணி



யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற நிலையில் மதியம் பிரதமர்

7➤

# முப்பது ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த முடியாத ஆண் ஒருவர் ஆற்றில் மூழ்கி மரணம்

## வாழைச்சேனையில் துயரம்

வாழைச்சேனை, ஏப். 11

கசிப்பு வியாபாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்துக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த முடியாத ஆண் ஒருவர் வாழைச் சேனை, நாசிவன்தீவு ஆற்றில் மூழ்கி உயிரிழந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை இரவு சடலமாக மீட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

7➤



# வடக்கு, கிழக்கில் அரங்கேற்றப்பட்ட சித்திரவதைகளுக்கும் நீதி வேண்டும்

## சபையில் ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஏப். 11

“பட்டலந்த வதை முகாமில் பயிற்சி பெற்றவர்கள், மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் ஒரே இரவில் 186 பேரைக் கொலை செய்தனர். இப்படி வடக்கு, கிழக்கில் பல வதைகளும், கொலைகளும் இடம்பெற்றுள்ளன. எனவே, வடக்கு, கிழக்குக்கும் நீதியின் கதவுகள் திறக்கப்பட

7➤

# சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த 22 இந்தியப் பிரஜைகள் வசமாகச் சிக்கினர்!

கொழும்பு, ஏப். 11

காலாவதியான விசாவைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த 22 இந்தியப் பிரஜைகள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது

7➤



**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 34 புதிய திட்டங்கள்!






கொழும்பு, ஏப் 11

அரசாங்கத்தின் பிரதான திட்டமாக செயற்படுத்தப்படும் "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 34 புதிய திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

இந்த திட்டங்களில் பலவற்றின் பணிகள் இந்த ஏப்ரல் மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கான ஒரு நாள் செயலமர்வு ஒன்று நேற்று (10) அலரி மாளிகையில் உள்ள லோட்டஸ் கட்டடத்தில் அமைந்துள்ள கிளீன் ஸ்ரீலங்கா செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, செயற்படுத்தப்படவுள்ள முன்மொழிவுகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்காக, அந்த திணைக்களத்தின் மாதிரிக்கு அமைவாக முன்மொழிவுகளை தயாரிப்பது தொடர்பில் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்ற பின்னர், உரிய வகையில் ஒரு செயல் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாகவும் அதற்கமைய துரிதமாக ஆரம்பிக்க வேண்டிய திட்டங்களை இம்மாத இறுதிக்குள் ஆரம்பிப்பது குறித்தும் இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் நோக்கங்கள் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இங்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், நாட்டில் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை விழிப்புணர்வை உருவாக்கி சமூகத்தை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும் நோக்கில், அனைத்து தரப்பினரின் பங்களிப்புடன் நாடளாவிய ரீதியாக செயல்படுத்தப்படவுள்ள "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்திற்கு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# அரசியல் பெரும் புள்ளிகளை காப்பாற்றும் அநுர அரசாங்கம் : சாமர சாடல்

கொழும்பு, ஏப் 11

கொள்ளையர்களைப் பிடிப்பதாக பெருமை பேசினாலும், இந்த அரசாங்கம், மகிந்த ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகிய இருவர் மீதும் கை வைக்காது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சமப்த் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (10) அவர் இதனைகள் குறிப்பிட்டுள்ளார்.

“பெரிய மீன்களுக்குப் பதிலாக சில சிறிய மீன்களை மட்டுமே பிடிப்பீர்கள்” அந்த வகையில் தற்போதைய அரசாங்கம் கைது செய்த ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் தாம் மட்டுமே என்று நாடாளுமன்ற உறுப்பினர் தசநாயக்க கூறியுள்ளார் .

1987 ஆம் ஆண்டுகளில் பதுளை - பெரகல தடுப்பு முகாம் மிகவும் ஆபத்தானதாக செயற்பட்டது.

இருப்பினும் அரசாங்கம் பட்டலந்தவை மட்டுமே தொடர்ந்து கூறி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# சுற்றுலாப் பிரதி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிவிப்பு



கொழும்பு, ஏப் 11

சுற்றுலாக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு நிறுவனங்களை ஒன்றிணைத்து தேசிய சுற்றுலா ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாப் பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடக கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், எதிர் காலத்தில் சுற்றுலாத் துறையில் மாற்றங்கள் பலவற்றை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சுற்றுலாக் கைத்தொழில் நாட்டில் முதன்மைக் கைத்தொழில். இவ்வாண்டில் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டிக்கு அழைத்து வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் காணப்பட்ட விசா பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் நிலைபேறான சுற்றுலாப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக சுற்றுலா அமைச்சு செயற்படுகின்றது.

எல்ல, காலி, சீகிரியா போன்ற பிரதான சுற்றுலாக் கவர்ச்சி மிகுந்த இடங்களின் அண்மையில் அவசர சிகிச்சைப் பிரிவுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சுற்றுலாத் தளங்களின் அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# காடுகளை பாதுகாக்கும் பெயரில் மக்கள் காணி அபகரிப்பு: வடக்கு மாகாண ஆளுநர் விசனம்



காடுகளை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் மக்களின் காணிகளை அபகரிப்பது மற்றும் அபிவிருத்திக்கு தடையாக இருப்பதையே நாம் எதிர்க்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

“மிக நீண்ட காலப் போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர். அவர்களது காணிகள் ஆள்நடமாட்டம் அற்ற நிலையில் அவையே காடுகளாக வளர்ந்துள்ளன.

அவற்றை கூகுள் வரைபடம் மூலமே வனவளத் திணைக்களம் வன உயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக அடையாளப்படுத்தி 2012ஆம் ஆண்டின் பின்னர் அரசிதழ் வெளியிட்டுள்ளன.

போரின் பின்னர் கூகுள் வரைபடத்தை மாத்திரம் பயன்படுத்தி, கள அலுவலர்களுக்கும், பிரதேச செயலர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கும் தெரியாமலேயே அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

அதுவே தற்போதுள்ள சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது” எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கையின் பல வருட வரலாற்றை மாற்றியமைக்கும் ஜனாதிபதி அநுர



கொழும்பு, ஏப் 11

கடந்த ஆண்டுகளை போன்று, இந்தாண்டு ஜனாதிபதியின் புத்தாண்டு சடங்கு நிகழ்வுகளை தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்ப செய்ய வேண்டாம் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

தான் எவ்வாறு புத்தாண்டு கொண்டாடுகிறேன் என்பதனை படம் போட்டு காண்பிப்பதில் எவ்வித பிரயோஜனமும் இல்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சடங்குகளை சரியான முறையில் செய்வதே கட்டாயமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொலைகாட்சி நிறுவனங்களை அழைத்து வந்து, அதனை நேரடியாக ஒளிபரப்பி பொது மக்களின் பணத்தை வீணடித்து, நான் பால் பொங்க வைப்பதனையும், பாற்சோறு சாப்பிடுவதனையும் மற்றவர்களுடன் மகிழ்ச்சியடைவதனையும் தொலைகாட்சியில காண்பிப்பதில் எந்த பயனும் இல்லை.

சாதாரண மக்கள் போன்று தான் எனது கொண்டாட்டமு இருக்கும். அதனை தொலைக்காட்சி வாயிலாக வெளிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதி புத்தாண்டு கொண்டாட்டங்களை மக்கள் நேடி ஒளிபரப்புகளில் அல்லது காணொளிகளில் பார்க்க முடியாது என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# வங்கிக் கணக்குகளில் இன்று வைப்புச் செய்யப்படவுள்ள பணம்

கொழும்பு, ஏப் 11

அஸ்வெசும பயனாளிகளுக்கான ஏப்ரல் மாதத் தவணைக்கான பணம் இன்று அவர்களது வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நன்மைகள் சபை இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும்,

1,737,141 பயனாளிகளின் கணக்குகளுக்கு 12.63 பில்லியன் பணம் மாற்றப்படும்.

குறித்த பயனாளி குடும்பங்களில் வசிக்கும் 70 வயதை கடந்த 580,944 நபர்களுக்காக ரூபாய் பில்லியன் 2.9 மொத்தத் தொகை வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படும்.

மேலும், வயது வந்தோருக்கான மாதாந்திர கொடுப்பனவு இந்த மாதத்திலிருந்து ரூ. 3,000 இலிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)



# உளறிக்கொட்டும் அமைச்சர்கள் உச்சகட்ட கோபத்தில் முதல்வர்!







தமிழக அமைச்சர்கள் ஏதோ ஒன்றை உளறிக்கொட்டி அவ்வப்போது சர்ச்சைக்கு வழி ஏற்படுத்திக் கொண்டே இருப்பது, தமிழக முதல்வருக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக அமைச்சர்களில் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவரான துரைமுருகன், சமீபத்தில் மாற்றுத்திறனாளிகள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை கூட்டத்தில் பேசினார்.

இதற்கு மாற்றுத்திறனாளிகள் மத்தியிலும், பொதுவான அனைவரது மத்தியிலும் கடும் கண்டனம் எழுந்தது. இது பற்றி முதல்வர் கேள்வி எழுப்பிய நிலையில் இன்று அமைச்சர் துரைமுருகன், வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேபோல, அமைச்சர் பொன்முடியும், உளறிக் கொட்டி சர்ச்சையை உற்பத்தி செய்யக்கூடியவராக இருக்கிறார். பெண்கள் பஸ்சில் ஓசியில் பயணிப்பதாக, கூறி கேலி செய்தவர் பொன்முடி. குறை சொல்ல வந்த பெண் ஒருவரை அவர் திட்டிய வீடியோ சமூக வலைதளத்தில் பரவி சர்ச்சை ஏற்பட்டது.

பெண் ஒன்றிய சேர்மனிடம் ஒருவரிடம், 'நீங்கள் எஸ்.சி., தானே' என்று கேள்வி எழுப்பி சர்ச்சையில் சிக்கினார். தண்ணீர் பிரச்னை பற்றி புகார் அளிக்க வந்த பெண்ணிடம், 'எனக்கா ஓட்டுப்போட்டு கிழித்தீர்கள்' என்று கேட்டார். கடைசியாக, அவர் பொதுக்கூட்டத்தில் பெண்கள் பற்றியும் சைவம், வைணவம் பற்றியும் அருவருக்கத்தக்க வகையில் பேசினார். இதற்கு அரசியல் கட்சியினர், பொதுமக்கள், நெட்டிசன்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். தேசிய மகளிர் ஆணையத்திலும் பா.ஜ., சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இப்படி மூத்த அமைச்சர்களே அரசுக்கு தலைவலி உண்டாக்கும் வகையில் உளறிக் கொட்டுவது முதல்வருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாகவே பொன்முடியின் கட்சிப்பதவி பறிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பதவியும் பறிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. முதல்வர் கோபத்தின் எதிரொலியாகவே அமைச்சர் துரைமுருகனும் தன் வருத்தத்தை பதிவு செய்துள்ளார் என்கின்றனர் கட்சியினர். (ஐ)

## மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்தும் பேச்சு: வருத்தம் தெரிவித்தார் துரைமுருகன்



மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்தும் வகையில் பேசியதற்கு, அமைச்சர் துரைமுருகன் நிபந்தனையற்ற வருத்தத்தை தெரிவித்தார். அண்மையில், தி.மு.க., பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் துரைமுருகன், "தமிழகத்தில் தி.மு.க.,வும், அ.தி.மு.க.,வும் தான் கட்சிகள். மற்றவை எல்லாம் கட்சிகள் இல்லை. அ.தி.மு.க.,வும், பா.ஜ.,வும் ஒரே அணியில் சேரும். ...... போன்றவர்களை சேர்த்துக் கொண்டு, தி.மு.க.,வை எதிர்க்கப் பார்க்கின்றனர். அவற்றை எல்லாம் சமாளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என பேசியிருந்தார்.

இவ்வாறு பேசுகையில், மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்தும் வகையிலான வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார். இதற்கு கடும் கண்டனம் வலுத்து வந்தது.

இந்நிலையில் இன்று (ஏப்ரல் 11) தன் பேச்சுக்கு அமைச்சர் துரை முருகன் நிபந்தனையற்ற வருத்தத்தை தெரிவித்தார்.

இது குறித்து துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கை: இயற்கையிலேயே உடலில் ஏற்பட்ட குறைபாடு உடையவர்களை அருவருக்கும் பெயர் கொண்டு, அவர்களை அழைத்து வந்ததை கருணாநிதி கருணை உள்ளத்தோடு 'மாற்றுத் திறனாளிகள்' என்று பெயரிட்டு அழைத்தார். அதையே நாங்களும் பின்பற்றி வருகிறோம்.

அப்படிப்பட்ட நானே, ஒரு பொதுக்கூட்டத்தில் பேச்சின் வேகத்தில் மாற்றுத் திறனாளிகளை பழைய பெயரையே கொண்டு உச்சரித்து விட்டேன். கட்சி தலைவர் (முதல்வர் ஸ்டாலின்) என் கவனத்திற்கு கொண்டு வந்தபோது, நான் அதிர்ச்சியும் - வருத்தமும் அடைந்தேன். கருணாநிதியால் வளர்க்கப்பட்ட நானே இந்த தவறை செய்தது மிகப்பெரிய தவறாகும்.

மாற்றுத் திறனாளிகள் உள்ளம் புண்பட்டிருக்கும். அதற்காக என் நிபந்தனையற்ற வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் ஸ்டாலின் எந்த அளவுக்கு வருந்தியிருப்பார் என்பது எனக்கு தெரியும். அவருக்கும் என் வருத்தத்தை தெரிவித்து, இனி இத்தகைய நிகழ்வு நிகழாது என்று உறுதி அளிக்கிறேன். இவ்வாறு துரைமுருகன் கூறியுள்ளார்.

பெண்கள் குறித்து பொன்முடியின் அவதூறு பேச்சு காரணமாக, கட்சி பதவி பறிக்கப்பட்ட நிலையில், அண்மையில் மாற்றுத்திறனாளிகள் குறித்து பேசியதற்கு இன்று துரைமுருகன் வருத்தம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டலால் பரபரப்பு

சென்னை சென்ட்ரல் ரயில்நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் உள்ள முக்கிய ரயில்நிலையங்களில் ஒன்று சென்ட்ரல் ரயில்நிலையம். இங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர். எனவே, பயணிகளின் பாதுகாப்பு கருதி, பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்படியிருக்கையில், சென்ட்ரல் ரயில்நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பார்சல் அலுவலகத்திற்கு வந்த இ-மெயிலில் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, ரயில்நிலையத்தில் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சென்னை வந்துள்ள நிலையில் விடப்பட்டுள்ள இந்த வெடிகுண்டு மிரட்டல் காரணமாக, அதிகாரிகளும், போலீசாரும் பெரும் பதற்றத்துடன் ரயில் நிலையத்தில் தீவிர சோதனையில் ஈடுபட்டிருப்பதை காண முடிந்தது.

ரயில்வே போலீசாரின் இந்த திடீர் சோதனையால் ரயில் பயணிகளை பீதிக்குள்ளாகினர். (ஐ)

# கற்றுக் கொடுக்கும் செயலிகள்!



சிலேட்டில் எழுதிப் பார்த்து, அதை அழித்து மீண்டும் பயன்படுத்திய காலமெல்லாம் 90ஸ் கிட்ஸ் தலைமுறையுடன் முடிந்துவிட்டது. இந்த தலைமுறை கல்வி கற்பது பெரும்பாலும் ஒன்லைனில்தான். தினமும் பள்ளி சென்றாலும் கூட சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்காமல் “யூட்யூபில்” பார்த்துத் தெளியப் பழகிவிட்டார்கள். இணைய வசதி இருந்தால் போதும். நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் உள்ளவருக்கும் புதிய விஷயங்களைப் பயில வாய்ப்பு கிடைக்கிறது.

பாடப்புத்தகங்கள், போட்டித்தேர்வுகள் தாண்டியும் கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கிறது. படித்து வேலையில் சேர்ந்த பிறகும் கூட கற்றுக் கொள்வது நின்றுவிடுவதில்லை. கற்றல் நின்று போனால் முன்னேற்றமும் அங்கேயே நின்றுவிடும். அப்படிச் சில கற்றல் செயலிகள் மற்றும் வலைத்தளங்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.




### கான் அகாடமி (https://www.khanacademy.org/)

பள்ளிப் பாடங்களை சிறு காணொளிகளில் விளக்கும் வலைத்தளம். செயலியும் இருக்கிறது. ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனியாக காணொளிகள் உள்ளன. கலை, அமெரிக்க, உலக வரலாறு, மனிதவளம் உள்ளிட்டவையும் காணொளிப் பாடத்தில் இருக்கின்றன. சில ஆயிரங்கள் கொடுத்தால் உங்கள் ஏழு வயதுக் குழந்தை கணினி கற்றுக்கொண்டு செயலி உருவாக்கி உலகப்புகழ் பெறுவார் என்பது மாதிரியான மிகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள் வெளியாகி பிறகு எதிர்ப்பினால் நிறுத்தப்பட்டன. இப்படியான அடிப்படைக் கணினி நிரல், அனிமேஷன் ஆகியவை இந்த வலைத்தளத்திலும் உள்ளது. ஆர்வமுள்ள சிறார்கள் முயன்று பார்க்கலாம். முற்றிலும் கட்டணமின்றி கற்றுக் கொள்ளலாம் என்பது கான் அகாடமியின் சிறப்பு. இலாப நோக்கமற்ற இவ்வமைப்பு தன்னார்வலர்கள், நன்கொடை மூலம் செயல்படுகிறது. மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் உதவும் வகையில் கற்றுக்கொடுக்கும் கருவிகளைக் கொண்டுள்ளது. பெற்றோர்களுக்கான பகுதியும் உண்டு. இது இத்தளத்தை நிறுவியவர்களின் கல்வி பற்றிய புரிதலுக்கும் பொறுப்புணர்வுக்கும் உதாரணம்.

இணையத் தொடர்பு உலகை திறன்பேசித் திரையளவுக்குச் சுருக்கிவிட்டது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பயில விரும்புபவர்கள் ஒன்லைன் மூலம் கற்கும் வாய்ப்பை பல தளங்கள் அளிக் கின்றன. கோர்ஸ்எரா (றறற.உழரசளநசய.ழசப), எட்எக்ஸ் (றறற.நனஒ.ழசப) இரண்டும் பிரபலமான தளங்கள். பெரும்பாலும், குறுகிய காலப் பாடங்களாக வடிவமைக்கப்பட்டவை. காணொளிகளைப் பார்த்து கற்றுக்கொண்டபின் பயிற்சிகளும் வழங்கப்படும். தேர்வும் உண்டு. அங்கீகரக்கப்பட்ட சான்றிதழும் கிடைக்கிறது. சான்றிதழ் தேவையில்லை என்றால் கட்டணமில்லாமலே கூட கற்றுக்கொள்ளலாம். சான்றிதழ் பெற கட்டணம் அவசியம்.

பலநாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் இந்த வகுப்புகளை எடுக்கிறார்கள். எழுத்து, நாடகம், வரைதல், உயிரியல், வியாபார மேலாண்மை, ஆடை வடிவமைப்பு, கணினி நிரல் எழுதுதல் என இத்தளங்கள் வழங்கும் பாடங்கள் வரிசைப் பட்டியல் போய்க் கொண்டே இருக்கிறது. மாணவர்கள் மட்டுமின்றி, அலுவலகத்தில் பணியில் இருப்பவர்களும் தங்கள் திறனை வளர்க்க, புதிதாக அறிமுகமானவற்றை கற்க இத்தளங்கள் உதவுகின்றன. பல ஆண்டுகளுக்கு ஒருமுறை பாடத்திட்டம் மாற்றுகின்றன உள்ளூர் பல்கலைக் கழகங்கள். நிறுவனங்களோ தினசரி மாறும் தொழில்நுட்ப உலகில் தங்கள் நிறுவனத்தில் உள்ள வேலைக்கு ஏற்ற விஷயங்கள் தெரிந்த பணியாளரைத் தேடுகின்றன. இவை இரண்டுக்கும் இடையே உள்ள இடைவெளியைத்தான் இத்தகைய தளங்கள் குறுகிய கால பாடங்களாக வைத்துள்ளன. அரசு வேலைவாய்ப்பில் இதற்கு மதிப்பில்லை என்றாலும் தனியார் நிறுவனங்கள் அமோக ஆதரவு இருக்கிறது. கூகுள் உள்ளிட்ட பெருநிறுவனங்கள் இந்த சான்றிதழ்களை அங்கீகரிக்கின்றன. எனவே வேலை வாய்புக்கும், பணி உயர்வுக்கும் இவை பெருமளவு உதவுகின்றன.




மொழிகளைக் கற்றுக்கொள்ள இருக்கும் செயலிகளில் பிரபலமானது டியுலிங்கோ (னரழடiபெழ). இந்திய மொழிகளில் ஒன்றான இந்தி உட்பட 40 மொழிகளைக் கற்கலாம். இலக்கு வைத்து படிக்க நினைப்பவர்களுக்கு இந்தச் செயலி மிகப் பொருத்தம். குறிப்பிட்ட காலத்துக்குள் படித்து, சரியாகக் கற்றுக்கொண்டு விடைகளைச் சொன்னால் நம்மை உற்சாகப் படுத்த புள்ளிகள், ரிவார்டுகள் என அள்ளித்தரும் இந்த செயலி. தவறானால் சில இதயப் புள்ளிகளைப் பறிக்கவும் தயங்காது. இப்படி விளையாட்டு போலவே இருப்பதால் கற்றல் ஆர்வம் அதிகமாகிறது.

மெம்ரைஸ் **(memrise)** செயலியில் சைனீஸ், டட்ச், ப்ரென்ச், ஜப்பனீஸ் போன்ற சில மொழிகளைப் பயில முடியும். அடிப்படை முகமன் கூறும் வார்த்தைதகள், பழகுவதற்கான வார்த்தைகள் முதல் ஓரளவு பேசுவது வரை சாத்தியம். இந்த வார்த்தைகளை உள்ளூர்வாசிகள் குரலில், உச்சரிப்பில் கேட்கும் வசதி இருப்பது இதன் சிறப்பு. இதனால் இந்த மொழியைப் பேசுபவர்கள் எப்படிப் பேசுகிறார்கள் என்பதை காணொளியில் பார்த்து, கேட்டு நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

வெளி மாநிலத்தில் அல்லது வெளிநாட்டில் உள்ள தமிழர்களின் குழந்தைகளுக்காக பல செயலிகள் தமிழ் மொழியைக் கூட இப்படி சொல்லிக் கொடுக்கின்றன. தாய் மொழியைப் படிக்காமலே பள்ளிக் கல்வியை முடிக்கும் விநோதமான சாத்தியமுள்ள நம் ஊரில் உள்ள குழந்தைகள் கூட படிக்கலாம். திரைப்பட பாடலாசிரியர் கார்க்கியின் பயில் வலைத்தளம் பணம் கட்டிப் படிக்கும் வகையிலானது. இலவச செயலிகளும் பிளேஸ்டோரில் நிறைய இருக்கிறது.

ஃபோட்டோமேத் (ிூழவழஅயவா) செயலி கணக்குகளை புகைப்படமாக எடுத்தால் அதற்கான தீர்வுகளைச் சொல்ல உதவும். கணிதச் சமன்பாடுகளை கூகுளில் தட்டச்சு செய்வது சிரமம். புகைப்படமாக எடுக்கும் போது சமன்பாடுகளை கணினியே புரிந்து கொள்கிறது. கூகுள் லென்ஸ் மூலமும் இதே மாதிரி கணிதப் புதிர்களுக்கு விடை காணலாம். கணிதம் என்பதே யோசித்து மாணவரின் புரிதலுக்கு ஏற்ப விடை காண்பதுதான். ஒரே மாதிரி இல்லாமல் பல வித தீர்வுகள் கணிதத்தில் சாத்தியம். இப்படி ஒரு செயலி இருப்பதால் மாணவர்கள் அதிகம் யோசிக்காமல் செயலியை உபயோகித்து விடையைத் தெரிந்து கொண்டு சிந்தனையை வளர்க்காமல் போகும் அபாயம் உள்ளது.

மனித மூளை அபார ஆற்றல் உடையது. மூளையின் பத்து சதவீதத்தைதான் நாம் பயன்படுத்துகிறோம் என்றொரு கருத்தும் உண்டு. நினைவுத்திறன், கணிதம், மொழி என தினமும் கொஞ்சம் பயிற்சி கொடுத்தால் இன்னும் கூர்மையாக வேலை செய்யும் என்கிறார்கள் சிலர். உடற்பயிற்சி போல மூளைக்கும் பயிற்சி கொடுக்கலாம். செய்தித்தாள்களில் இருக்கும் சுடோகு, குறுக்கெழுத்துப் புதிர்கள் போல. லுமோஸிடி **(Lumosity)** எனும் செயலி கணிதம், மொழி, குறைந்த நேர நினைவுத் திறன் மேம்பாடு, விரைந்து முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட பல மூளைச் செயல்பாடுகளுக்கு பயிற்சி கொடுக்கிறது.

பிரில்லியன்ட் **(brilliant)** எனும் செயலி ஸ்டெம் ளுவுநுஆ எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகிய நான்கு துறைகளில் மூளைச் செயல்பாட்டை சிறப்பாக்கும் வகையில் வடிவமைக்கபட்டது. இன்னும் பல மூளைப் பயிற்சி செயலிகளும் இணையத்தில் உள்ளன. இந்தச் செயலிகள் சொன்னால் அப்படியே நம்பிவிடுவீர்களா? உங்கள் மூளையை உபயோகித்து சிந்தித்துப் பார்க்க மாட்டீர்களா? அப்படியெல்லாம் மூளைக்கு பயிற்சி கொடுக்க முடியாது. மூளை ஏற்கனவே நூறு சதவீத பயன்பாட்டில்தான் இருக்கிறது என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

நாங்கள் மூளையை வளர்க்கிறோம் எனச் சொல்லவில்லையே, அறிவுத்திறன் செயற்பாட்டை **(cognitive performance)** வளர்க்கிறோம் என்றுதானே சொல்கிறோம் என்கின்றன இந்தச் செயலிகள். சிந்தித்தல், விரைவாக முடிவெடுத்தல், நினைவில் வைத்தல் ஆகியவை அறிவுத்திறன் செயற்பாட்டில் அடங்கும். நீங்க நம்பாவிட்டாலும் அதுதான் நிஜம் என்று ஒப்புக்கொண்டு ஜோஹாரே போன்ற சில நிறுவனங்கள் தங்கள் நேர்காணலில் இத்தகைய செயலிப் பயன்பாடுகளைக் கூட கணக்கில் கொள்கின்றன. இவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தி விளையாடி நிறைய படிநிலைகளைத் தாண்டி இருந்தால் லெவலுக்கு ஏற்ப நேர்காணலில் சிறப்புப் புள்ளிகள் கொடுக்கின்றன இந்நிறுவனங்கள். வெறுமனே திறன்பேசித் (7ஆம் பக்கம் பார்க்க..)

# உக்ரைனுக்கு ரூ.5,000 கோடி மதிப்பிலான ராணுவ உதவி வழங்கிய ஐரோப்பிய நாடுகள்



உக்ரைனுக்கு ரூ.5,000 கோடி மதிப்பிலான ராணுவ உதவிகளை அந்நாட்டுக்கான சர்வதேச நிதியத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகள் வழங்கியுள்ளன.

உக்ரைன் - ரஷ்யா நாடுகளுக்கு இடையிலான போர் 3 ஆண்டுகளை கடந்தும் தொடர்ந்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

இருப்பினும், இரு நாடுகளுக்கு இடையிலான தாக்குதல் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. உக்ரைனில் கணிசமான நிலப்பரப்பை கைப்பற்றி ரஷ்யா தங்கள் வசம் வைத்துள்ளது. ஐரோப்பிய நாடுகள் உதவியுடன் உக்ரைன் ராணுவமும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு ரூ.5,000 கோடி மதிப்பிலான ராணுவ உதவிகளை பிரிட்டன் தலைமையிலான உக்ரைனுக்கான சர்வதேச நிதியம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக, இந்த முடிவை எடுத்துள்ளதாக பிரிட்டன் பாதுகாப்புத்துறையின் செயலாளர் ஜான் ஹீலி தெரிவித்துள்ளார். உக்ரைனின் ராணுவத்தை பலப்படுத்துவதன் மூலம், ரஷ்யாவின் தாக்குதலை ஒடுக்க முடியும் எனவும் அவர் கூறினார். ஆயிரக்கணக்கான டிரோன்கள் வாங்கவும், டாங்கி எதிர்ப்பு சுரங்கங்கள், ராணுவ வாகனங்களை பழுது பார்க்கவும் இந்த தொகை வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் வழங்கப்படும் ரூ.5,000 கோடியில் ரூ.3,500 கோடியை பிரிட்டன் வழங்கியுள்ளது. எஞ்சிய தொகையை உக்ரைனுக்கான சர்வதேச நிதியத்தின் மூலம் நார்வே கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வர்த்தகப் போர் எதிரொலி: ஹாலிவுட் படங்களுக்கு சீனா கட்டுப்பாடு

அமெரிக்க-சீனா வரிப்போர் காரணமாக, ஹாலிவுட் படங்களுக்கு சீனா புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே சில நாட்களாக, வர்த்தக போர் நடந்து வருகிறது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், நேற்று சீனப் பொருட்களின் மீதான வரிகளை 125 சதவீதமாக உயர்த்தினார், அதே நேரத்தில் சீனா 84 சதவீத பழிவாங்கும் வரியை விதித்துள்ளது.

இந்த வர்த்தகப் போரின் எதிரொலியாக, ஹாலிவுட் படங்கள் மீது சீனா சில கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்துள்ளது.

இது குறித்து சீன திரைப்பட நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை:உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களுக்கு இடையிலான மோதல் அதிகரித்து வருவதால், சீனாவில் திரையிடப்படும் அமெரிக்காவின் ஹாலிவுட் திரைப்படங்களின் எண்ணிக்கையை மிதமாக குறைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



நாங்கள் சந்தை சட்டத்தைப் பின்பற்றுவோம், பார்வையாளர்களின் விருப்பத்தை மதிப்போம், அமெரிக்க படங்களின் எண்ணிக்கையை மிதமாகக் குறைப்போம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

ஏற்கனவே, வெளிநாட்டுப் படங்களின் எண்ணிக்கையை பீஜிங்கில் ஏற்கனவே கட்டுப்படுத்தி வருகிறது. இருப்பினும், சீனாவின் இந்த நடவடிக்கை, அமெரிக்க ஸ்டுடியோக்களுக்கு ஒரு அடியாக இருக்கும் எனக் கூறப்படுகிறது



# சுற்றுலா பயணிகள் ஹெலிகாப்டர் ஆற்றில் விழுந்து 6 பேர் பரிதாப பலி

அமெரிக்காவில் நியூயார்க் நகரின் ஹட்சன் நதியில் சுற்றுலா பயணிகள் ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கியதில் 6 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் ஹட்சன் நதி அமைந்துள்ளது. மன்ஹாட்டன் நகரைச் சுற்றி சுற்றுலாப் பயணிகள் ஏற்றி சென்ற ஹெலிகாப்டர் ஒன்று ஹட்சன் நதியில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 3 குழந்தைகள் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர். சுற்றுலா பயணிகள் உயிரிழப்பிற்கு நியூயார்க் நகர மேயர் இரங்கல் தெரிவித்து உள்ளார்.

இறந்தவர்களில் ஸ்பெயினிலிருந்து வருகை தந்த ஒரு விமானி மற்றும் சுற்றுலா பயணிகள் அடங்குவர். தீயணைப்பு துறை அதிகாரிகள் மீட்பு முயற்சி மேற்கொண்டனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணை நடந்து வருகிறது. (ஐ)



# மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம்: சீனா உறுதி

*பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்தே உள்ளன எனக்கூறியுள்ள சீனா, மிரட்டல்களுக்கு அஞ்ச மாட்டோம் எனத் தெரிவித்து உள்ளது.*

*அமெரிக்க அதிபராக பதவியேற்றதும், டிரம்ப் வெளிநாட்டு பொருட்களுக்கு வரி விதித்து வருகிறார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சீனாவும் வரி விதிக்க துவங்கியது. இதனால், அந்நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை டிரம்ப் 104 சதவீதமாக உயர்த்தினார். சீனாவும், அமெரிக்க பொருட்களுக்கான வரியை 84 சதவீதமாக உயர்த்தியது. இது தொடர்பாக சீன அரசின் வர்த்தகத்துறை செயலாளர் ஹே யோங்கியான் கூறியதாவது: அமெரிக்கா உடன் மோதலை நாங்கள் விரும்பவில்லை. அதேநேரத்தில் அந்நாட்டின் நெருக்கடிக்கு அடி பணிய மாட்டோம். சீனாவின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது. பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா விரும்பினால், அதற்கு சீனா தயாராக உள்ளது. ஆனால், பேச்சுவார்த்தை பரஸ்பரம் சமத்துவம் மற்றும் மரியாதை அடிப்படையில் இருக்க வேண்டும். ஆனால், மிரட்டல், நெருக்கடி மற்றும் அழுத்தம் ஆகியவற்றின் மூலம் சீனாவை கையாளவது சரியான முடிவு கிடையாது. வர்த்தக போரில் யாரும் வெற்றி பெறப்போவது இல்லை. அமெரிக்கா தனது சொந்தப் பாதையில் பயணிக்க முடிவு செய்தால், சீனாவும் கடைசி வரை போராடும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)*

## முப்பது....

முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 65 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி நபர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்திவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்ட போதிலும் நீதிமன்றின் மூலம் அவரைப் பிணையில் விடுவித்தனர்.

இதனை தொடர்ந்து நீதிமன்றில் தண்டப்பணம் செலுத்துவதற்கு பணத் தேவை ஏற்பட்டதையடுத்து மகளிடம் 30 ஆயிரம் ரூபா பணத்தை கோரியுள்ள நிலையில் அவரிடம் அந்தளவுக்குப் பணம் இல்லாததைத் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை வீட்டை விட்டு வெளியேறியவர் வீடு திரும்பாத நிலையில் அவரை உறவினர்கள் தேடி வந்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், நாசிவன்தீவு ஆற்றில் சடலம் ஒன்று நீரில் மூழ்கிய நிலையில் இருக்கின்றது என்று பொலிஸாருக்குப் பொதுமக்கள் அறிவித்த நிலையில் மேற்படி சடலத்தை நேற்று இரவு 10 மணிக்கு மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பொலிஸார் ஒப்படைத்தனர்.

மேலும்,இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாவிட்டபுரம்....

ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பிரதமர் ஆலயத்துக்கு வருகை தர விருந்த நிலையில் அதிகாலை வேளை ஆலயச் சூழலில், பொலிஸ் விசேட அதிரடி படையினர், பொலிஸார் மற்றும் பிரதமர் பாதுகாப்புப் பிரிவினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலத்தப்படுத்தப்பட்டது.

ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்கள் சோதனையிடப்பட்டு கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்த நிலையில் பலரும் விசனம் தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னர் சிறிது நேரத்தில் ஆலய தர்மகார்த்த சபையினர் முக்கியஸ்தர்களுடன் பேசியதை அடுத்து, பாதுகாப்புப் கெடுபிடிகள் ஓரளவு தளர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத.....

செய்யப்பட்டனர். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இராஜகிரிய பிரதேசத்தில் உள்ள அலுவலகம் ஒன்றில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்படடனர்.

கைதான இந்திய பிரஜைகள் சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி இலங்கைக்கு வந்துள்ள நிலையில் விசா காலாவதியான பின்னரும் சட்டவிரோதமாக இராஜகிரிய பிரதேசத்தில் தங்கியிருந்துள்ளனர்.

25 முதல் 35 வயதுக்குட்பட்ட 22 இந்தியப் பிரஜைகளே கைதாகியுள்ளனர் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது என்றும் திணைக்கள அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## வடக்கு...

வேண்டும்." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

"பட்டலந்த வதை முகாமில் சித்திரவதை தொடர்பில் பயிற்சி பெற்றவர்கள், 1988, 1989 களில் ஜே.வி.பி. இளைஞர்களைச் சித்திரவதை செய்தவர்கள், பின்னர் அப்படியே 1990 காலப்பகுதியில் மட்டக்களப்புக்கு வந்து சித்திரவதைகளைச் செய்தனர்.

குறிப்பாக சத்துருக்கொண்டானின் 1990 ஆம் ஆண்டில் சுற்றிவளைப்பு செய்யப்பட்டு 186 பேர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதில் 42 பேர் 10 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களில் ஐவர் விசேட தேவை உடையவர்கள்.

இந்த 186 பேரும் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர். இது தொடர்பில் விசாரணை நடைபெற்றது. 35 ஆண்டுகள் கடந்தாலும் இன்னும் நீதி பரிகாரம் கிடைக்கவில்லை. நீதிக்கான கதவை தற்போது திறந்துள்ளீர்கள். வடக்கு, கிழக்கில் இப்படி பல கொலைகள் இடம்பெற்றுள்ளன.

சகலருக்கும் நீதி என்ற அடிப்படையில் உங்களால் வடக்கு, கிழக்குக்கும் நீதியின் கதவுகள் திறக்கப்பட வேண்டும். அநியாயம், அராஜகம் செய்த கொடியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்." - என்றார்.

# சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த 22 இந்தியர்கள்!

இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 22 இந்தியர்கள் கொண்ட குழு நேற்று (10) கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால், இராஜகிரிய பகுதியில் உள்ள ஒரு அலுவலக வளாகத்தில் இருந்து இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடிவரவு புலனாய்வுப் பிரிவினால் சந்தேகத்திற்கிடமான இரண்டு இந்தியர்களிடம் திடீரென நடாத்தப்பட்ட விசாரணையின் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஏனைய நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் 25 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில், இந்தக் குழு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு நாட்டிற்கு வந்துள்ளது. அவர்களில், 17 பேர் சுற்றுலா விசாக்களிலும், நான்குப் பேர் குடியிருப்பு விசாக்களிலும், ஒருவர் வணிக விசாவிலும் வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது மிரிஹானாவில் உள்ள தற்காலிக தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் உடனடியாக இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பலத்த அடிகாயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப். 11

நுங்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகாதென்ன பகுதியில் உள்ள வீடொன்றின் அறையிலிருந்து பலத்த அடிகாயங்களுடன் உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மாளிகாதென்ன, வெயங்கொடை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் நுங்கமுவ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# அதிகாலையில் பதிவான துப்பாக்கி சூட்டு சம்பவம்!

கொழும்பு புறநகர் பகுதியான கிரிபத்கொட கால சந்தி பகுதியில் இன்று (11) அதிகாலை 2:30 மணியளவில் துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுளளது.

பொலிஸாரால் நடாத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் இருந்த ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை செய்த வேளை, சந்தேக நபர் தப்பிச் செல்ல முயற்சித்ததால் இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பு மாநகர சபை தேர்தலுக்கான இடைக்காலத் தடை நீக்கம்- மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவு!

கொழும்பு மாநகர சபை உட்பட 18 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதைத் தடுத்து, விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

அந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவித்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹிர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், சட்டமா அதிபரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

# கற்றுக் கொடுக்கும்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

திரையைத் தேய்த்து வெட்டியாக எதையோ விளையாடுவதற்கு பதில் இதில் விளையாடினால் நேர்முகத்தேர்வில் மதிப்பென்றால் இதன் உண்மைத் தன்மை பற்றி அதிகம் கவலை கொள்ள வேண்டாம் என்பதே பலரின் எண்ணம்.

வெளிநாடுகளில் உள்ள பள்ளிகளில் கல்வி ஆலோசகர் என ஒருவர் இருப்பார். மாணவர் மதிப்பெண் மற்றும் திறன்களை ஆராய்ந்து அவர் மேற்படிப்பாக என்ன படிக்கலாம் என பரிந்துரைப்பார். நம் நாட்டில் இந்த முடிவை பெரும்பாலும் பெற்றோரே எடுக்கின்றனர். இதை ஒன்லைன் சோதனைகள் மூலமும் முடிவு செய்யலாம். பைலட் ஆகும் கனவுடைய ஒருவர் அடிப்படையாக கணிதமும் இயற்பியலும் தெரிந்தவராக இருக்க வேண்டும். இந்தச் சோதனையில் அவரின் கணிதத்திறன் குறைவு என வந்தால் அவர் தன் திறனுக்கேற்ற வேறு கனவை யோசிக்கலாம். அல்லது தன் கனவுக்குத் தேவையான திறனை வளர்த்துக் கொள்ளலாம். இவை ஓரளவுக்கு நம் திறனைப் புரிந்து கொள்ளத்தான். நம் குடும்ப சூழ்நிலை, எதிர்காலத் திட்டம், கையிலிருக்கும் பணம், படிக்க ஆகும் காலம் அனைத்தையும் பொருத்து முடிவுகளை நாம்தான் எடுக்க வேண்டும். முடிவெடுக்கத் தேவையான காரணிகள் பட்டியலில் இந்த தளங்களின் பரிந்துரையும் ஒன்றாக வைத்துக் கொள்ளலாம்.

என்ன வேலை நமக்கு உகந்ததாக இருக்கும்? நம் எண்ணங்கள் நம்மை எந்த மாதிரி நபராக உருவாக்குகிறது? நம்முடைய ஐக்யூ லெவல் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு விடை தேடுபவர்கள் இம்மாதிரித் தளங்களை நாடலாம். நம்மை நாமே புரிந்து கொள்ள உதவும் இவை. ாவவிள:ஃஃறறற.123வநளவ. உழஅஃ ாவவிள:ஃஃறறற.16நசளழயெடவைநைள. உழஅஃ போன்ற பல தளங்கள் உள்ளன. மேற்படிப்பு, வேலை, உறவுகள் என நம் தேவையைப் பொருத்து இந்தச் சோதனைகளை தேர்ந்தெடுக்கலாம். அடிப்படை நிலைகள் மட்டுமே இலவசம். மேலதிகத் தகவல்களுக்கு பணம் செலுத்த வேண்டும்.

பெரும்பாலான அறிவுசார் செயலிகளையும் வலைத்தளங்களையும் போல கடந்தகாலத்தை விளக்குவதோடு அல்லாமல் எதிர்கால யோசனைகளைக்கும் இடம் கொடுப்பது டெட் டாக்ஸ் (வுநுனு வுயடமள) செயலி. தொழில்நுட்பம், பொழுதுபோக்கு, வடிவமைப்பு ஆகிய சொற்களின் ஆங்கில வார்த்தைச் சுருக்கம்தான் டெட். புதிய யோசனைகளைப் பற்றி சர்வதேச வல்லுநர்கள் பேசும் டெட் மாநாடு உலகப்புகழ் பெற்றது. இவர்களின் செயலியிலும் வலைத்தளத்திலும் இப்படிப் புதுப்புது யோசனைகளைப் பற்றிய பேச்சுக் காணொளிகள் மூலம் பலவற்றைத் தெரிந்துகொள்ளலாம். கடந்தகால வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், பொழுதுபோக்கு, உலகளாவிய பிரச்சனைகள், சுயமுன்னேற்றம் என பல தலைப்புகளில் காணொளிகள் இருக்கின்றன. தமிழ் உட்பட பல மொழிகளில் சப்டைடில் இருக்கிறது.

வானியலில் ஆர்வம் இருப்பவர்கள் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமாக நாசா செயலியை உபயோகித்துப் பார்க்கலாம். காணாளிகள், புகைப்படங்கள், கட்டுரைகள் என பல வடிவங்களில் வானியல் பற்றிய செய்திகள் கொட்டிக்கிடக்கிறது. விண்வெளி பின்புலத்தில் செல்ஃபி எடுப்பது மாதிரி வேடிக்கைச் செயல்பாடுகளும் உண்டு. விண்வெளியைப் பற்றி அதை ஆராய்பவர்களே விவரிப்பதைத் தெரிந்து கொள்வது முற்றிலும் சிறந்த அனுபவமாக இருக்கும்.

பெர்ஃபெக்ட் இயர் (நசகநஉவ நயச) செயலி இசை ஆர்வம் உள்ளவர்களுக்கானது. காதுகளை சரியான ரிதத்துக்கு பழக்கப்படுத்த இச்செயலி உதவுகிறது. அடிப்படை நிலைகள் அனைத்தும் இலவசம். இசை பற்றிய பாடங்களும், இசைக்குறிப்பு வாசிப்பது பற்றியும் கூட அறிந்துகொள்ளலாம். சிறு சிறு பயிற்சிகள் மூலம் இசை அறிவை வளர்க்க முடியும். ஆர்வமிருந்தால் மற்ற பயனர்கள் உடன் போட்டியிடலாம்.

இங்கு குறிப்பிட்டுள்ளவை மிகச் சில மட்டுமே. எல்லாத் துறைகளிலும் பாடங்கள் சொல்லிக் கொடுக்கும் தளங்களும் செயலிகளும் இணையம் முழுவதும் கொட்டிக் கிடக்கின்றன. அள்ளிக்கொள்ள கற்றல் ஆர்வம் இருந்தால் போதும்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2025 இல் வெளியிடப்பெற்றது.